ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2215/59 - 2021 පෙබරවාරි මස 19 වැනි සිකුරාදා - 2021.02.19

*2215/59 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

*ச.அ.இல.: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/1/14/28*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி**
**கோட்டாபய ராஜபக்ஷ அவர்களினால்**

முத்திரை

கோட்டாபய ராஜபக்ஷ

1. கௌரவ தம்மிக பிரியந்த சமரக்கோன் ஜயவர்த்தன அவர்கள்
   உயர்நீதிமன்ற நீதிபதி
2. கௌரவ (திருமதி) கேமா குமுதினீ விக்கிரமசிங்க அவர்கள்
   உயர்நீதிமன்ற நீதிபதி

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள்!

1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்ட, தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 2021, சனவரி மாதம் 28 ஆந் திகதிய அதிகாரப் பத்திரத்தின் மூலம் விசேட சனாதிபதி ஆணைக்குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்,

மேலும், சொல்லப்பட்ட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் உறுப்பினர் கௌரவ மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ரத்னபிரிய குருசிங்க அவர்கள் தமது பதவியிலிருந்து கேட்டு விலகியுள்ளாராதலாலும்,

1A - G 33761 — 385 (2021/02)
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

மேலும், அதனால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்பவேண்டிய தேவை இனங்காணப்பட்டுள்ளதாதலாலும்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி பதவியை வகிக்கும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், தங்களின் விவேகம், திறமை மற்றும் பற்றுறுதி என்பவற்றின்மீது மிகுந்த பக்தியும் நம்பிக்கையும் வைத்து, 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்ட, தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சோபித்த ராஜகருணா அவர்களை மேற்சொல்லப்பட்ட அதிகாரப் பத்திரத்திற்கமையத் தாபிக்கப்பட்ட விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக இத்தால் நியமிக்கின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின் கீழ் இரண்டாயிரத்து இருபத்தோராம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆந் திகதியாகிய இன்று கொழும்பில் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.